

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகட்டுதல்களின்படி திருத்துறைப்பூண்டி நகர தி.மு.க. சார்பாக ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையை திருச்சியில் அமைய உள்ள ”பெரியார் உலகம்” திட்டத்திற்கு திராவிட கழக தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களிடம் நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன் வழங்கினார்.




பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் ஏற்பாட்டில், இளைஞர் அணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு, வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம், என்.புதூர் கிராமத்தில் அமைந்துள்ள அரசுப் பள்ளிக்கு மாணவ, மாணவிகள் பயன் பெறும் வகையில் ஸ்மார்ட் டி.வி. வழங்கினார்கள். அந்த பள்ளிக்கு வைபை இண்டர்நெட் வசதியையும் துவக்கி வைத்தனர். அதன் பிறகு அங்குள்ள மாணவ,மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ந. ஜெகதீஸ்வரன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணா.இள உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகூரில் புகழ் பெற்ற நாகூர் ஆண்டவர் தர்கா 460 வது ஆண்டு கந் தூரி விழாவை முன்னிட்டு தாபூத்து என்றும் சந்தனக்கூடு ஊர்வலம் அபிராமிஅம்மன் திருவாசலடி அருகில் இருந்து புறப்பட்டதை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் . பொய்யாமொழி தொடங்கி வைத்தார். உடன் நாகை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத் தலைவருமான என்.கௌதமன், முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன், நாகை நாடாளு மன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. இராஜேந்திரன், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன், நகர கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில் குமார் மற்றும் பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கண்டோன்மெண்ட் வாரிய தேர்தலில் அ.தி.மு.க.வினரின் பிரச்சினை தொடர்பாக உதகை நீதிமன்றத்தில் அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக் மற்றும் திராவிடமணி , ரவிகுமார், ராமசாமி, சதக்கதுல்லா, லாரன்ஸ், பரமசிவன், குமார் உள்ளிட்ட கழக முன்னணியினர் ஆஜரானார்கள்.

### அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# கட்டப்படும் கலைஞர் அறிவாலயம் அடிக்கல் நாட்டு விழா அழைப்பிதழ்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஒன்றியம், நகரம்,பேரூர் வாரியாக கழக நிர்வாகிகளுக்கு நேரில் சென்று வழங்கினார்!

அரியலூர், டிச. 4 -

அரியலூர் மாவட்ட கழகத்தின் சார்பில் வரும் 5ஆம் தேதி அரியலூரில் நடைபெற உள்ள “கலைஞர் அறிவாலயம் அடிக்கல் நாட்டு விழா” நடைபெறுவதை முன்னிட்டு அரியலூர் மாவட்டம் முழுவதும் உள்ள மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், மற்றும் BLA2, BLC, BDA உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் அரியலூர் நகரம், அரியலூர் மத்திய, வடக்கு மற்றும் தெற்கு ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் கிளை கழக செயலாளர்கள் மற்றும் கழகத் தோழர்களை சந்தித்து, கலைஞர் அறிவாலயம் அடிக்கல் நாட்டு விழா அழைப்பிதழ்களை வழங்கி அனைத்து கழகத் தோழர்களையும் வரவேற்றார்,

தொடர்ந்து செந்துறை ஒன்றியத்திற்கு சென்று செந்துறை தெற்கு ஒன்றியம்,செந்துறை வடக்கு ஒன்றியம், செந்துறை மேற்கு ஒன்றியம், அதனை தொடர்ந்து ஆண்டிமடம் சென்று ஆண்டிமடம் மேற்கு ஒன்றியம்,ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம்,ஆண்டிமடம் கிழக்கு ஒன்றியம்,வரதராஜன் பேட்டை பேரூர் கழகம், அதனையும் தொடர்ந்து ஜெயங்கொண்டம் சென்று ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றியம், ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியம், ஜெயங்கொண்டம் நகரம், உடையார்பாளையம் பேரூர் கழகம், அதனையும் தொடர்ந்து குருவால ப்பர்கோயில் சென்று ஜெயங்கொண்டம் மத்திய ஒன்றியம்,

தொடர்ந்து தா.பழூர் சென்று தா.பழூர் கிழக்கு ஒன்றியம், அதனையும் தொடர்ந்து சுத்தமல்லி சென்று தா.பழூர் மத்திய ஒன்றியம், தா.பழூர் மேற்கு ஒன்றியம், அதனையும் தொடர்ந்து திருமானூர் சென்று திருமானூர் கிழக்கு ஒன்றியம், திருமானூர் மத்திய ஒன்றியம்,திருமானூர் மேற்கு ஒன்றியம் உள்ளிட்ட மாவட்டம் முழுவதும் உள்ள மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவருக்கும் கலைஞர் அறிவாலயம் அடிக்கல் நாட்டு விழா அழைப்பிதழ் வழங்கி வரவேற்றார்.

### பென்னாகரத்தில் முன்னாள் மாவட்டச் செயலாளர்

# பி.என்.பெரியண்ணன் 16 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## கழகத்தினர் திரளாக பங்கேற்பு!

தருமபுரி , டிச 4 -

ஒருங்கிணைந்த தர்மபுரி மாவட்ட கழக முன்னாள் செயலாளரும், பென்னாகரம் சட்டமன்ற தொகுதியின் முன்னாள் உறுப்பினருமான அமரர்.பி என் பெரியண்ணன் அவர்களின் 16 ஆவது நினைவு தினம் பென்னாகரத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் அனுசரிக்கப்பட்டது.

இதில் முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, தர்மபுரி நகர கழக பொறுப்பாளர் எம்.பி.கௌதம், மாநில நிர்வாகி ஆர்.பி. செந்தில்குமார், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் என். செல்வராஜ்,பச்சையப்பன், என்.பி.பெரியண்ணன், கிருஷ்ணன், வீரமணி,முத்துசாமி,காவேரி, கருணாநிதி, எம்வீடி. கோபால், பேரூர் கழக செயலாளர்கள் வீரமணி, பிரகாஷ், முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர்கள் இல.கிருஷ்ணன்,எச்சனஹள்ளி.சண்முகம்,முருகேசன்,சபரிநாதன், பென்னாகரம் சட்ட மன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பாரி,முன்னாள் நகர செயலாளர்கள் டி.பி. தங்கராஜ்,மே.அன்பழகன்,

நகர கழக நிர்வாகிகள் முல்லைவேந்தன்,சுருளிராஜன்,இளைஞர் அணி ஆர். சிவகுரு,கே.ஆர்.சி.செல்வராஜ், அசோக்குமார், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் ஜெ. ராஜேஷ், உதயசூரியன்,

சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் முனியப்பன்,ராகுல்,ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் சரவணன்,திவாகர், பாலாஜி, நஞ்சப்பன்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அன்பழகன்,ரியல் எஸ்டேட் ரவி,மோட்டுப்பட்டி சக்திவேல் ஷானு, முரளி மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிகள், தோழமை கட்சியின் நிர்வாகிகள், கழகத்தின் உடன்பிறப்புகள் மற்றும் தொகுதியைச் சார்ந்த பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு முன்னாள் மாவட்டக் கழக பொறுப்பாளரும்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பி.என்.பி.இன்பசேகரன் மற்றும் அவர் குடும்பத்தினர் முன்னிலையில் மலர் அஞ்சலி செலுத்தினர்.

### பல நிறுவனங்களுக்கு கோடிக்கணக்கில் சலுகை காட்டும் ஒன்றிய அரசு

# வேலைவாய்ப்புகளை சரிபார்க்க எடுக்கப்படும் நடவடிக்கை என்ன?

## நாடாளுமன்றத்தில் – ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, டிச. 3 -

நிறுவனங்களுக்கு கோடிக்கணக்கில் சலுகை; ஆனால், உருவாகும் வேலைவாய்ப்புகளை சரிபார்க்க எந்த அமைப்பும் இல்லை என நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு அளித்த அலட்சிய பதில்களுக்கு எம்.பி. கே.இ. பிரகாஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

எஃகுத் துறையில் ‘Speciality Steel’ தயாரிப்பை ஊக்குவிப்பதற்காக, இந்திய நிறுவனங்களை Production Linked Incentive (PLI) திட்டத்தில் இணைத்து, ரூ.6,322 கோடி மக்கள் வரிப்பணத்தைச் சலுகையாக வழங்கிக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. இதன் மூலம் 30,000க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் ஒன்றிய அரசு வாக்குறுதி தந்துள்ளது.



இந்த நிலையில், அந்த 30000க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதை எப்படி சரிபார்ப்பது என்றும், அந்த வேலைவாய்ப்புகள் தற்காலிகமானதா, நிரந்தரமானதா என்பதை அறிவது குறித்தும், நாடாளுமன்றத்தில் எஃகு அமைச்சகத்திடம் கேள்விகள் எழுப்பினேன்.

1. ரூ.6322 கோடி சலுகை; ஆனால், வேலைவாய்ப்புகளை சரிபார்க்க எந்த வழிமுறையும் இல்லை:

‘Speciality Steel’ தயாரிப்பில் இறங்கும் நிறுவனங்களுக்கு, PLI திட்டத்தின் கீழ் ரூ. 6,322 கோடி சலுகை வழங்குவதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இத்தனை கோடி சலுகை வழங்குவதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக, 30,000க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று உறுதி அளித்துள்ளது. இது மூன்றாம் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இதுவரை 13,284 வேலைவாய்ப்புகள் உருவாகியிருப்பதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

ஆனால், ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் அளித்திருக்கும் பதிலில், வேலைவாய்ப்புகளை சரிபார்க்க எந்த வழிமுறையும் இல்லை என்று கூறியுள்ளது.

சரியான சரிபார்ப்பு முறை இல்லாத பட்சத்தில், நிறுவனங்கள் உண்மையான கணக்கைத் தான் சொல்கின்றன என்பதை எப்படி நம்புவது? இப்போது அறிவித்துள்ள கணக்குமே சரியானது தானா என்ற சந்தேகமே எழுகிறது.

2. “நாங்கள் வெறும் Facilitator”: கடமையில் இருந்து நழுவும் ஒன்றிய அரசின் தந்திரம்

ஒன்றிய அரசு அளித்துள்ள பதிலில், PLI திட்டத்தை பொறுத்தவரை தன்னை வெறும் Facilitator என்று அறிவித்துள்ளது. ஆனால், 6322 கோடி மக்கள் வரிப்பணத்தை சலுகையாக கொடுக்கும் போதும், 30000க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று பெருமையாக சொல்லும்போதும், தன்னை முதல் வரிசையில் அமர்த்திக் கொண்டது ஒன்றிய அரசு.

ஆனால், வேலை வாய்ப்பை சரிபார்க்க என்ன வழிமுறை என்று கேட்கும் போது மட்டும், “நாங்கள் வெறும் Facilitator “ என்று கூறி நழுவுகிறது ஒன்றிய அரசு.

3. உருவாகும் வேலை வாய்ப்புகளும் தற்காலிகமானதா, நிரந்தரமானதா எனத் தகவல் இல்லை:

PLI திட்டத்தில் உருவாகும் வேலைவாய்ப்புகளின் ‘நீண்ட கால நிலைத்தன்மை’ (Sustainability) குறித்த கேள்விக்கு, ஒன்றிய அரசு பொறுப்பற்று மௌனத்தை பதிலாக தந்துள்ளது. இந்த மௌனம், இதுவரை உருவானதாக ஒன்றிய அரசு அறிவித்த வேலைவாய்ப்புகள் மற்றும் இனி உருவாகும் வேலைவாய்ப்புகள், நிரந்தரமானதா அல்லது திட்டம் முடிவதற்குள் காலாவதியாகிவிடுமா என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

**எனது கோரிக்கை:**

சட்டப்பூர்வச் சரிபார்ப்பு கட்டாயம்:

PLI திட்டத்தின் கீழ் எஃகு துறையில் உருவாக்கப்படும் ஒவ்வொரு புதிய வேலை வாய்ப்பும் அரசு தரவுகளுடன் கட்டாயமாகச் சட்டப்பூர்வமாகஇணைக்கப்பட்டு, மூன்றாம் தரப்பு தணிக்கை (ThirdParty Audit) செய்யப்பட வேண்டும்.

நிறுவனங்களுக்கு கோடிக்கணக்கில் சலுகைகளை அள்ளிக்கொடுப்பதில் இருக்கும் ஈடுபாட்டை, அதில் மக்களுக்கு நேரடியாக பயன்படும் வேலை வாய்ப்புகளின் மீது இருக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சரின் பதிலுக்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.




திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திண்ணகோணம் ஊராட்சி, நாச்சம்பட்டி மற்றும் கருப்புகோவில் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூபாய் 43.92 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நியாயவிலைக் கடைகளை எஸ்.கதிரவன் எம்.எல்.ஏ திறந்து வைத்து பயனாளிகளுக்கு பொருட்கள் வழங்கினார்.உடன் ஒன்றிய செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியா ப்பட்டணம் தெற்கு ஒன்றியம் சார்பில் முதியோர் இல்லத்தில் காலை உணவை வழங்கி , தொடக்கப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், அதனை தொடர்ந்து ஏழை எளிய மக்களுக்கு வேட்டி, சேலையை தெற்கு ஒன்றிய செயலாளரும், முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான ஏ. விஜயகுமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு மத்திய மாவட்ட கழகம் சார்பில் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர பேரூர் கழகங்களிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. விஜயமங்கலம் அரசு தொடக்கப்பள்ளியில் ஈரோடு மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் குழந்தைகளுக்கு அறுசுவை உணவு வழங்கினார். நிகழ்வில் ஒன்றிய பொறுப்பாளர்கள் செல்வராஜ், பிரகாஷ், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி யின் ஆலோசனைப்படி அரூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் எஸ்ஐஆர் வாக்காளர் திருத்தப் பணிகளை நகர செயலாளர் முல்லைரவி பார்வையிட்டு நகர வாக்குச் சாவடி முகவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். உடன் ஜாமியா மஸ்ஜித்,முத்தவல்லி சபீர்அகமது,மாவட்ட துணை செயலாளர் செ.கிருஷ்ணகுமார் பேரூர் கழக துணை செயலாளர் செல்வதயாளன் மருத்துவரணி திருவேங்கடம் நகர இளைஞரணி அமைப்பாளர் செந்தில்குமார் மற்றும் தி.மு.க.வினர் பங்கேற்றனர்.